18 வது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சைதாப்பேட்டை, சென்னை–15

சி .சி.எண்.40/2026 தேதி : 20–05–2026

அரசுதரப்பு சாட்சி – 1

பெயர் – செந்தில் குமார்

த/பெயர் – சுப்பிரமணி

வயது – 53

முகவரி – எண்,12/63, முத்து தெரு, இராயப்பேட்டை, சென்னை.

// பாரதீய சாக்ஸிய அத்னியம்–ன் படி இன்று 2026 ம் ஆண்டு மே திங்கள் 20–ம் நாள் என்னால் உறுதி செய்யப்பட்டது //

**(எதிரிகள் ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் ஏற்பு )**

**ஆரம்பிக்கும் நேரம்–** 1.05

**முதல் விசாரணை**

நான் கார் டிரைவராக வேலை செய்கிறேன். எதிரிகள் எனக்கு பக்கத்து வீட்டுக்கார்கள். 17.6.2025 அன்று காலை 8.00 மணிக்கு எனது மகள் தனலட்சுமி என்பவர் கல்லூரி செல்வதற்காக மோட்டார் சைக்கிள்–ஐ எடுத்தபோது 1ம் எதிரி எனது மகள் எடுத்த மோட்டார் சைக்கிள்–ஐ என் மகள் மீது தள்ளிவிட்டுருந்தார். இருப்பினும் என் மகள் கல்லூரிக்கு சென்றுவிட்டார். இந்த சம்பவத்தை என் மனைவி ராதிகா பார்த்துள்ளார். எனவே அவர் சென்று 1ம் எதிரியிடம் முதல் தளத்தில் வைத்து அது பற்றி கேட்டார். நான் 2 வது தளத்திலுள்ள எனது வீட்டிலிருந்து அதனை பார்த்தேன். பிறகு நானும், முதல் தளத்திற்கு இறங்கி வந்தேன். என் மனைவியும், 1ம் எதிரியும் பேசிக்கொண்டுருந்த போது அந்த இடத்திற்கு 2,3 ம் எதிரிகளும் வந்தார்கள். பிறகு அவர்கள் மூவரும் எனது மனைவியின் தலை முடியை பிடித்து இழுத்தார்கள். 3ம் எதிரி துடைப்ப கட்டையால் என் மனைவியின் பின் தலையில் அடித்தார். நான் தடுக்க போன போது 2ம் எதிரி என்னை வாயில் அடித்தார். அதனால் வாயில் இரத்த காயம் ஏற்பட்டது. என் மனைவியின் தலையை கிரில் கேட் இடையில் 1,2 எதிரிகள் தள்ளினார்கள். அப்போது பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள். அதன் பிறகு நானும் என் மனைவியும் இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றோம். பிறகு அன்றே காவல் நிலையம்

சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது தான் நான் கொடுத்த புகார் ஆகும். அந்த புகார் அ.த.சா.ஆ– 1 ஆகும்.

(இந்த வழக்கும் சி.சி எண். 41/2026 வழக்கும் எதிரிடை வழக்குகளாகும். எனவே இரண்டு வழக்குகளிலும் தனித்தனியே அரசு வழக்கறிஞர் ஆஜராகி வேண்டியுள்ளதாகவும் மேலும் இரண்டு வழக்குகளும் ஒரே நாளில் விசாரணை செய்யப்படவேண்டும் என்பதாலும் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

**கு.வி–**

**முடிக்கும் நேரம்– 1.15**

ஒப்பம்/திரு. R. செந்தில்குமார்/

18 வது நீதித்துறை குற்றவியல் நடுவர்,
சைதாப்பேட்டை, சென்னை–15.